# பாதுகாப்பு புகலிட முயற்சி விசாக்கள் (SHEV)

## SHEV யைப் பெறுதல்

விசா இல்லாமல் ஆஸ்திரேலியாவிற்கு வந்து சேரும் புகலிடக் கோரிக்கையாளர்கள் (படகு மூலம் வந்து சேர்ந்தவர்கள்) தங்களுக்குப் பாதுகாப்புத் தேவைப்பட்டால் படிவம் 866 இல் உள்நாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு (DHA) விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் விண்ணப்பம் செய்ய அனுமதிக்க முதலில் அமைச்சர் 'தடையை அகற்ற வேண்டும்' உங்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்று நீங்கள் நிரூபித்**தால், அத்துடன்** சுகாதாரம், பண்பு மற்றும் பாதுகாப்புச் சோதனைகளைப் பூர்த்தி செய்தால் தற்காலிகமான பாதுகாப்பை பெறலாம் - பாதுகாப்பான புகலிட முயற்சி விசா (SHEV) அல்லது தற்காலிகமான பாதுகாப்பு விசா (TPV).

## SHEV க்கான நிபந்தனைகள்:

- ஐந்து ஆண்டு விசா. TPV அல்லது SHEV விசா காலாவதியாகும் முன்பு இன்னுமொரு TPV அல்லது SHEV க்கு மீண்டும் விண்ணப்பிக்கலாம்.
- DHA க்கு 28 நாட்களுக்குள் முகவரி மாற்றம் அறிவிக்க வேண்டும்(படிவம் 929)
- DHA க்கு விண்ணப்ப படிவத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் குறித்த மாற்றங்கள் பற்றி அறிவிக்க வேண்டும்(படிவம் 1022)
- வேலை உரிமைகள், சென்ரலிங், மெடிகெயர், வேலை தேடுவதற்கான உதவி மற்றும் குறுகிய கால அறிவுரை / ஆலோசனை
- 18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்லலாம்.
- 18 வயதிற்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் வயது வந்தோருக்கான புலம்பெயர்வு ஆங்கிலம் திட்டம் கிடைக்கும். மற்றக் கல்விக்கு எந்த அரசு மானியங்களும் இல்லை
- குடும்ப உறுப்பினர்களை ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு வர முடியாது
- தாய் நாட்டிற்குச் சென்று, திரும்பி வர முடியாது
- நீங்கள் மற்ற நாடுகளுக்குச் சென்று திரும்பி வருவதற்கு, நீங்கள் பயணம் செய்வதற்கு முன்பு அமைச்சரிடம் இருந்து எழுதப்பட்ட அனுமதி தேவை
- சில மற்ற (SHEV வழிப்பாதை) விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியும்

## SHEV முடியும் போது என்ன நடக்கும்?

SHEV வைத்திருப்பவர்கள் தங்களுடைய தற்போதைய விசா காலாவதியாகும் **<u>முன்பு</u>** இன்னமொரு TPV அல்லது SHEV க்கு விண்ணப்பிக்கலாம் (படிவம் 1505). உங்களுக்கு <u>இன்னமும் பாதுகாப்புக் கடப்பாடு இருப்பதாக</u> அவர்கள் நிரூபித்தால் நீங்கள் இரண்டாவது TPV அல்லது SHEV விசாவைப் பெறலாம். <u>ரெயில்ஸ் (RAILS) இன் தகவல் தாளைப்</u> பார்க்கவும்.


விசா காலாவதியாவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் விசா வைத்திருப்பவருக்கு மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் DHA ஒரு நினைவூட்டலை அனுப்பும். விசா வைத்திருப்பவர்களின் தொடர்பு விவரங்கள் மாறினால் அவர்கள் DHA க்குத் தெரிவிக்க வேண்டும் அல்லாவிட்டால் அவர்கள் நினைவூட்டலை பெறும் வாய்ப்பு இல்லாமல் போகலாம்.

நடப்பிலுள்ள SHEV காலாவதியாகும் முன்பு மேலும் விண்ணப்பம் செய்தால், முடிவெடுக்கும் வரை தற்போதைய விசா தொடரும். அனைத்து நன்மைகளும் வேலை / கல்வி கற்கும் உரிமைகளும் தொடரும், ஆனால் தற்போதைய விசா காலாவதியாகும் முன் புதிய படிவங்கள் மெடிகெயரில் தாக்கல் செய்ய வேண்டும் (படிவம் MS 004) அத்துடன் centrelink க்கும் கொடுக்க வேண்டியிருக்கும்.

சில SHEV வைத்திருப்பவர்கள் வேலை / கல்வி கற்றல் தொடர்பான 'SHEV வழிப்பாதை' விதிகளை (கீழே பார்க்கவும்) நிறைவு செய்தால் , வேலை, மாணவர் அல்லது குடும்ப விசாக்களுக்கு (இன்னொரு TPV அல்லது SHEV க்குப் பதிலாக) விண்ணப்பிக்க முடியும்.

## வேறு விசாக்களுக்கு 'SHEV Pathway' (வழிப் பாதை)

SHEV விண்ணப்பத்தில் உள்ள SHEV வைத்திருப்பவர் அல்லது ஒரு குடும்ப உறுப்பினர் **பிராந்தியப் பகுதி** ஒன்றில் 3.5 ஆண்டுகள் வேலை அல்லது படிப்பை நிறைவு செய்தால், நீங்கள் சில வேலை, மாணவர் அல்லது குடும்ப விசாக்களுக்கு விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கும்.



3.5 ஆண்டுகளின் போது, நீங்கள் அல்லது ஒரு குடும்ப உறுப்பினர் பின்வருவனவற்றை நிறைவேற்றி இருக்க வேண்டும்:

- SHEV பிராந்திய பகுதியில் (முழுநேர, பகுதி நேர, தற்காலிக, நிரந்தரமற்ற அல்லது பருவகால) வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும் அத்துடன்  சென்ரலிங் சிறப்புக் கொடுப்பனவுகள் எதையும் பெறவில்லை.; **அல்லது**
- பிராந்திய ஆஸ்திரேலியாவில் முழுநேரக் கல்வி கற்கையில் சேர்ந்து மற்றும் உடல்ரீதியாக கலந்துகொள்ளல்; **அல்லது** மேலே கூறப்பட்ட பணி அல்லது கல்வி ஆகியவற்றின்  சேர்க்கை.

அந்த 3.5 ஆண்டுகளும்  நீங்கள் DHA  படிவம் 1465 இல் உங்கள் பணி மற்றும் கல்வி கற்றல் பற்றிய பதிவுகளை வைத்திருக்க வேண்டும்

## பிராந்தியப் பகுதி

நீங்கள் ஒரு பிராந்திய அஞ்சல் குறியீட்டு பகுதியில் வசிக்க வேண்டும் அல்லது வேலை அல்லது கல்வி கற்பதற்காக அந்தப்  பகுதிக்குப் பயணம் செய்ய  வேண்டும். பிராந்திய பகுதி அஞ்சல் குறியீடுகள் DHA யின்  இணையதளத்தில் உள்ளன . அவை மாறுவதற்கான வாய்ப்பு இருப்பதால் எப்போதும் சரிபார்க்கவும்.

## 'வழிப்பாதை விசாவிற்கு' (pathway) யார் விண்ணப்பிக்கலாம்?

புதிய வழிப்பாதை விசா விண்ணப்பத்தில்  சேர்க்கக்கூடிய குடும்ப அலகின் ஒரு உறுப்பினர் மட்டுமே வேலை / கல்வி கற்றல் குறித்த விதிகளில் சித்தி அடைய  வேண்டும். எனவே, வேலை / கல்வி கற்றல்  தேவைகளைப் பூர்த்தி செய்யும் முதல் SHEV விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்ட குறைந்தது ஒரு குடும்ப உறுப்பினர், வழிப்பாதை  வீசா விண்ணப்பத்தில் ஒரு குடும்ப அங்கத்தவராக  சேர்க்கப்பட வேண்டும் அல்லது செய்ய முடியும்.

## 'Pathway விசா' ஒன்றுக்கு நீங்கள் எப்போது விண்ணப்பம் செய்யலாம்?

3.5  ஆண்டுகள் முடிந்தவுடன், நீங்கள் மற்ற விசாக்களில் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் வெவ்வேறு SHEV களில் 3.5 வருடப் பணி / கல்வி கற்றல் தேவைகளைப் நிறைவேற்றலாம். உதாரணமாக, நீங்கள் உங்கள் முதல் SHEV இல் 2 ஆண்டுகள் வேலை செய்யலாம் அத்துடன் 3.5 ஆண்டுகளை நிறைவேற்றுவதற்கு  இரண்டாவது SHEV யில்  1.5 வருடக் கல்வி கற்றலை மேற்கொள்ளலாம்.

## நான் **SHEV pathway** யை நிறைவேற்றவில்லை என்றால் என்ன நிகழும்?

நீங்கள் 5 வருடங்களுக்குள் 3.5 வருட பணி / கல்வி கற்றல் SHEV pathway (வழிப்பாதை) தேவைகளை நிறைவு செய்யாவிட்டால், நீங்கள் வேலை / கல்வி கற்றல் வழிப்பாதையைத் (pathway) திருப்தி செய்ய உண்மையான முயற்சி எடுத்திருப்பதாகக் காட்டினால், மற்றொரு SHEV க்கு விண்ணப்பிக்க DHA உங்களுக்கு அனுமதி வழங்கலாம். ஆனால் நீங்கள் பிராந்தியப் பகுதியில் வேலை செய்யவோ அல்லது படிக்கவோ முயலவில்லை என்றால், நீங்கள் ஒரு TPV க்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்

உங்களுக்கு SHEV வழங்கப்பட்டு, நீங்கள் பிராந்திய பகுதிக்குச் செல்லவில்லையென்றால், உங்கள் SHEV யை இரத்து செய்ய முடியாது.

## நான் ஒரு வழிப்பாதை (pathway) விசா பெறுவதற்கான வாய்ப்புகள் என்ன?

வழிப்பாதை விசாக்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளைப் பெறுவது மிகவும் கடினமாக உள்ளது அத்துடன் அவைக்கான விண்ணப்பக் கட்டணம் அதிகம். நீங்கள் 3.5 வருடங்களுக்குப் பிறகு குடும்ப, கல்வி கற்றல் அல்லது, வேலை விசாக்களுக்கு விண்ணப்பித்தால், நீங்கள் விசாவைப் பெறுவீர்கள் என்று அர்த்தமில்லை. பல விசாக்களுக்கு உயர் ஆங்கிலத் திறமைகளும் பணி தகுதிகளும் தேவை

நீங்கள் அனுபவம் வாய்ந்த புலப்பெயர்வு முகவர்களிடம் / வழக்கறிஞர்களிடம் இந்த விசாக்களைப் பற்றி அறிவுரை பெற வேண்டும், ஏனெனில் அவை பல விதிமுறைகளைக் கொண்டிருக்கின்றன. அரசாங்கம் சில நேரங்களில் இந்த விசாக்களுக்கான விதிகளை மாற்றிக் கொள்கிறது மற்றும் SHEV வைத்திருப்பவர்களுக்கு நிரந்தர வதிவிடம் பெற கடினமாகவோ அல்லது எளிதாகவோ செய்யலாம்.

குடும்ப, கல்வி அல்லது பணி விசாக்கள் பற்றிய தகவல்கள் **DHA யினுடைய வலைத்தளத்தில்** உள்ளன.

.

**செயல்திறனுடைய விசாக்கள்**

189 (செயல்திறனுடையது – சுதந்திரமானது)

190 (செயல்திறனுடையது – நியமிக்கப்பட்டது)

476 (செயல்திறனுடையது –அங்கீகரிக்கப்பட்ட இளநிலைப் பட்தாரி)

489 (செயல்திறனுடையது – பிராந்திய ( தற்காலிகமானது)

858 ( சிறந்த திறமை)

**வேலை வழங்குபவரால் ஆதரவளிக்கப்பட்ட விசாக்கள்**

186 (வேலை வழங்குபவரின்  நியமனத் திட்டம்)

187 ( பிராந்திய ஆதரவளிக்கப்பட் புலப்பெயர்வுத் திட்டம்)

482 (தற்காலிக திறமைக் குறைவு)

**வணிக விசாக்கள்**

132 (வணிகத் திறமை)

188 (வணிகக் கண்டுபிடிப்பும் முதலீடும் (தற்காலிகம்)

405 (முதலீட்டாளர் பணி ஓய்வு)

**குடும்ப விசாக்கள்**

143 (பங்களிப்பு பெற்றோர்)

445 (சார்ந்துள்ள குழந்தை)

801 ( துணைவர்)

802 (குழந்தை)

804 (வயதான பெற்றோர்)

820 (துணைவர்)

835 (மீதமுள்ள உறவினர்)

836 (பேணுநர்)

837 (அனாதை உறவினர்)

838 (வயது சார்ந்த உறவினர்)

858 ( சிறந்த திறமை)

864 (பங்களிப்பு வயதான பெற்றோர்)

884 (பங்களிப்பு வயதான பெற்றோர் ( தற்காலிகம்)

**மாணவர் விசாக்கள்**

402 (பயிற்சியும் ஆராய்ச்சியும்)

500 (மாணவர்)

590 (மாணவர் பாதுகாப்பாளர்)

நான் **TPV** இலிருந்து **SHEV** க்கு மாற்றலாமா**?**

<u>நீங்கள் ஏற்கனவே TPV வைத்திருந்தால்</u> அத்துடன் SHEV க்கு விண்ணப்பிக்க விரும்பினால், நீங்கள் 'ஒரு பின்தொடர்கிற தற்காலிகமான பாதுகாப்பு விசா அல்லது பாதுகாப்பு புகலிட முயற்சி விசாவிற்கான விண்ணப்பம் ' படிவம் 1505 ஐ பூர்த்தி செய்ய வேண்டும், உங்களுடைய அகதிக் கோரிக்கை திணைக்களத்தினால் மறுபடியும் மதிப்பீடு செய்யப்படும், அத்துடன் நீங்கள் ஒரு முடிவைக் காத்துக்கொண்டிருக்கும் போது உங்கள் TPV தொடரும்

<u>நீங்கள் ஏற்கனவே TPV ஒன்றுக்கு விண்ணப்பித்து,</u> எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனில், நீங்கள் SHEV விண்ணப்பத்திற்கு மாறலாம். உங்கள் TPV விண்ணப்பத்தை அகற்றுவதற்காக DHA க்கு ஒரு கடிதம் அனுப்ப வேண்டும் அத்துடன் நீங்கள் எதற்காக ஒரு அகதி என்ற அதே தவல்களுடன் ஏதாவது புதிய தகவல்கள் இருப்பின் அவற்றையும் சேர்த்து படிவம் 790 SHEV விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அதனையும் அனுப்பவேண்டும். முதலில் புலப்பெயர்வு முகவரின் / வழக்கறிஞரின் ஆலோசனையை நீங்கள் பெற வேண்டும்.

நீங்கள் SHEV ஐ பெற்றால், நீங்கள் SHEV ஐ பெறும் போதுதான் 3.5 வருட கால 'SHEV pathway' காலம் தொடங்கும்.

இந்தத் தகவல் தாள் சட்டத் தகவல்களைக் கொண்டிருக்கின்றது , சட்ட ஆலோசனை அல்ல. துல்லியமான ஆலோசனைக்குப் பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவரை / வழக்கறிஞரைப் பார்க்கவும்.

ஜூலை 2018 ல் இற்றைப்படுத்தப்பட்டது